539—

சீர்காழி தொகுதியில் கூட்டுறவு இறால் பண்ணை அமைத்தல்.

*15485—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியில் கூட்டுறவு முறையில் இறால் பண்ணை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சீர்காழி தொகுதியில் கூட்டுறவு முறையில் இறால் பண்ணை அமைப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை-காயிதே மில்லத் மாவட்டம் சீர்காழி தொகுதியில் உள்ள பழையாறு, கூழையாறு, திருமுல்லைவாசல், துவ்வாய் போன்ற கடற்கரை பகுதிகளில் வசிக்கும் மீனவர்களுக்கும் மற்றும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே வேலை வாய்ப்பு இருப்பதால் மீதம் உள்ள காலங்களில் அவர்கள் எந்தவித வேலை வாய்ப்பும் இல்லாமல் கஷ்டப்படு கிறார்கள். எனவே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் அந்த ஏழை விவசாயிகளுடைய வறுமை நிலையினைக் கருத்திற் கொண்டு கடற்கரை ஓரங்களில் கூட்டுறவு முறையில் இறால் பண்ணை அமைத்து அதற்கு மானியத்துடன் கடன் வழங்கி அதில் மீனவர்களுக்கும், விவசாய கூலிகளுக்கும், தொழிலாளர் களுக்கும் வேலைவாய்ப்பு கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர் கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : பேரவைத் தலைவர் அவர்களே, பி.எஃப்.டி.ஏ. என்று சொல்லக்கூடிய பிராக்கிஷ் வாட்டர் ஃபிஷ் ஃபார்மர்ஸ் டெவலப்மெண்ட் ஏஜன்சியை செங்கை-எம்.ஜி.ஆர்.மாவட்டத்தில் வாணியஞ்சாவடியிலும்,தென் ஆற்காடு மாவட்டத்தில் கடலூரிலும், தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டையிலும்,வ.வு.சி. மாவட்டத்தில் தூத்துக்குடியிலும் தற்போது ஐந்தாம் முகமையை இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ. 17 இலட்சம் செலவில் நமது தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்பாடு செய்ய உத்தரவிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையிலே அந்த முகமை யிலே உறுப்பினராகி அவர்கள் அந்தப் பண்ணையிலே தொழில்

செய்தால் அவர்களுக்கு திட்ட அறிக்கை தயார் செய்து வங்கிக் கடனும் பெற்றுத் தந்து அதே நேரத்திலே ரூ. 30,000 வரையிலே மானியமாகவும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 540, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

540—

பூம்புகார் கல்லூரி மாணவர்களுக்கு பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி.

*16887—திரு. எம். பூராசாமி : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பூம்புகார் கல்லூரி மாணவர்களுக்கு பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்சமயம் வாய்ப்புகள் இல்லை.

திரு. எம். பூராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதி. அங்கே ஆயிரக்கணக்கிலே மாணவர்கள் படிக்கின்றார்கள். ஏழை எளிய மக்கள் வாழ்கின்ற அந்த பூம்புகாரில் வீட்டிலிருந்து கல்லூரிக்கு வருவதற்கு மாணவர்கள் கஷ்டப்படுவதால் அவர்களுக்கு அங்கேயே தங்கிப் படிப்பதற்கு ஒரு விடுதியை அமைத்துக் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை–காயிதே மில்லத் மாவட்டத்தை பொறுத்தமட்டில் மொத்தம் 60 விடுதிகள் இயங்கி வருகின்றன. பூம்புகாரில் அரசு கல்லூரியில் 321 பிற்படுத்தப்பட்ட மாணவர்களும் 376 மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் மற்றும் சீர்மரபினர் மாணவர்கள் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 5 கிலோமீட்டர் அப்பாலிலிருந்து 250 பிற்படுத்தப்பட்ட மாணவர்களும், 275 மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவர்களும் வந்து படித்துச் செல்கின்றனர்.